மார்ச் – 16

**"நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்." - 1யோவா 3 : 14, 16.**

இந்த "சகோதரரின்" கடைசியானதும் மிகவும் கடுமையானதுமான சோதனைகளில் ஒன்றும், ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும் ஆயுதம் தரிக்கப்பட்டுமிருந்தவர்களில், ஒருவேளை அநேகர் விழுந்து போவதில் ஒன்றுமான சோதனை, சகோதரரிடத்தில் அன்பு கூறுவது. தோன்றுகிறது போல அநேகர் இந்த முக்கிய விஷயத்தில் தவறி, ஆகையால் இதினிமித்தம் ராஜ்யத்திற்குட்படும் பரிபூரண பிரவேசத்துக்கு யோக்கியதையில்லாதவர்களாக எண்ணப்படுவார்கள். யாராவது பிரத்யோகமாக பலவீனராகவோ இடறிவிழ ஏதுவாகவும் இருந்தால், மூத்த சகோதரனும் அதிபதியுமானவர் அந்தவிதமாக செய்யமாட்டாதது போல், உண்மையான சிலுவையின் போர் சேவகன் அவனை இகழவோ, திட்டவோ மாட்டான். அதற்குமாறாக பலமுள்ளவர்களின் கூட்டத்திலே அவன் மிகவும் அதிக அதிகமாகத் தானே சந்தோஷப்பட்டாலும், அவன் பெலவீனமுள்ளவனுக்காக விழிப்புள்ளவனாகவும், உதவுகிறவனாகவும் இருப்பான். **-Z ’99, 88 (R 2450).**

நாம் நீதிமான்களாக்கப்பட்டிருப்பதற்கும், ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பதற்குமான சான்றுகளில் ஒன்று என்னவென்றால், யேசு கிறிஸ்துவின் சீஷர்களான சகோதரரிடத்தில் அன்பு கூறுவது. கிறிஸ்துவில் அவர்களுடன் அவனுக்கிருக்கும் சம்பந்தத்தினால் நன்றியுடன் மெச்சக்கூடிய விதமாகவும், சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கிற சுயவெறுப்பின் அளவில் இந்தக் குணத்தைக் கொண்டுள்ளவன், ஆவியை உடையவனாயிருப்பதின் நிச்சயத்திலிருக்கலாம். தெய்வீக குடும்பத்தில் நிச்சயத்திலிருக்கலாம். தெய்வீக குடும்பத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற நாம் சகோதரர்களுக்காக ஜீவனைக் கொடுக்கக் கர்த்தருக்குக் கடன் பட்டிருக்கிறோம். இது நாம் உட்பட்டிருக்கும் உடன்படிக்கை உரிமையுடன் கேட்கிற நாம் செலுத்த வேண்டிய ஒரு கடன். **-P ’33, 46.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோவா 13:34,35; 15:9-19; ரோம 12:9,10; 13:8-10; 1கொரி 13; கலா 5:13,22; கொலோ 2:2; 3:12-14; 1தெச 3:12; 4:9; 1பேது 1:22; 2:17; 3:8; 4:8; 1யோவா 2:10; 3:11,17,18,23; 4:7,11,12,20,21.

**கோபுர வாசிப்பு : Z ’13, 339 (R 5346).**

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நான் சகோதரர்களை நேசித்து அவர்களுக்கு ஊழியம் செய்தேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?